சதவிகிதத்தை, 3 சதவிகிதமாக மாற்றி, மாற்றுத் திறனாளிகளுக்காகத் தான் என்றென்றும் இருக்கின்றேன் என்பதை உறுதிசெய்யும் பொருட்டு, மாற்றுத் திறனாளிகளுக்காகக் குடியிருப்புகள் ஒதுக்கித் தந்திருப்பதற்காக மாற்றுத் திறனாளிகளின் துறையின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, நன்றி, அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற மூன்றும் ஒவ்வொரு மனிதனின் அத்தியாவசியத் தேவையாகும். இருக்க இடம் என்பது எட்டாத கனவாக இருந்து வந்ததை, நனவாக்க, மிகப் பெரிய ஓர் அறிவிப்பை வெளியிட்டு, உண்ண உணவும் கொடுத்து, உடுக்க உடையும் தந்து, இருக்க இடமும் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவை உறுப்பினர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தகவல் கோரல்

திண்டுக்கல், குடிநீர்ப் பிரச்சினை, சாலை பழுது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் எழுப்பவிருந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல்லில் மூன்று குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. அதில், காவிரிக் குடிநீர்த் திட்டத்தில், 4 தினங்களுக்கு ஒருமுறை தண்ணீர் கிடைக்கிறது. காமராஜர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் கிடைப்பதற்கு 11 நாட்கள் ஆகின்றன. இந்த நகரத்திற்குத் தேவையானது 21 எம்.எல்.டி., தண்ணீர் ஆகும். இத்தகைய ஒரு சூழ்நிலையில், காமராஜர் நீர்த் தேக்கத்தை விரிவுபடுத்தி, ஆழப்படுத்தி, அதற்கான ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்கினால், நகரத்திற்கு இன்னும் கூடுதலாக 5 எம்.எல்.டி., தண்ணீர் கிடைக்கும். அதேபோன்று, வைகை அணையிலிருந்து நேரடியாகக் குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டத்தின்மூலம் குறைந்தபட்சம் 5 எம்.எல்.டி., தண்ணீருக்காவது பொதுப் பணித் துறை நிருவாகம்

2011 செப்டம்பர் 8] [செல்வி கே. பாலபாரதி]

ஆய்வு செய்ய முன்வந்தால், திண்டுக்கல்லினுடைய குடிதண்ணீர் பிரச்சினை தீருவதற்கு அது உதவி செய்யும். ஆகவே, அந்த வைகைக் குடிநீர்த் திட்டத்தை, முதல் கட்டமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று 2010 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் 221 இலட்சத்தில் நேருஜி நகரிலிருந்து தாடிக்கொம்பு ரோடு வரை 2 கிலோ மீட்டருக்கு போட்ட ரோடு என்பது நான்கே மாத காலத்தில் குண்டும், குழியுமாக மாறி, சமீபத்தில் பெய்த மழையில் அந்தக் குழி முழுவதும் கருப்புத் தார், கருப்புத் தண்ணீராக மாறிவிட்ட அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, ரோடுகள் மிக மோசமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், ஏற்கெனவே போடப்பட்ட இந்தப் புதிய ரோடுகளும் 4 மாதங்களில் பழுதடைந்து மிக மோசமாக இருக்கின்றன. இதுகுறித்து விசாரணை செய்து, அந்தச் சாலையை யார் அமைத்தார்களோ, அவர்களையே மீண்டும் நல்ல சாலையாக அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன். நன்றி.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரம் 2 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள்தொகையைக் கொண்ட ஒரு நகரமாகும். அந்த நகரத்திற்கு ஆத்தூர் காமராஜ சாகர் அணையிலிருந்தும், காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்தும் மொத்தமாக 16 எம்.எல்.டி. தண்ணீர் இப்பொழுது வந்துகொண்டிருக்கிறது. அந்த நகரத்திற்கு இப்பொழுது ஒரு நாளுக்கு, ஒரு நபருக்கு 71 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட்டுவருகிறது. 90 லிட்டர் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், தினமும் 19 எம்.எல்.டி. தண்ணீர் தேவைப்படுகிறது. அதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, காமராஜ சாகர் நீர்த் தேக்கத்தில், 14 நீர் உறிஞ்சும் கிணறுகளை மேலும் ஆழப்படுத்தி, தூய்மைப்படுத்தி, கூடுதலாக 5 எம்.எல்.டி. தண்ணீர்*

[திரு. கே.பி. முனுசாமி] [2011 செப்டம்பர் 8

கொடுப்பதற்காக 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறது. அது காலதாமதமாகிவிடும் என்பதற்காகவும், விரைவாகத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், நகராட்சி நிருவாகம் வாயிலாக ரூ.1 கோடி செலவில் மேலும் 2 எம்.எல்.டி. தண்ணீர் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, வைகைப் பேரணையிலிருந்து குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். வைகைப் பேரணையிலிருந்து 8 குடிநீர்த் திட்டங்களைக் கொண்டுவருவதற்காகப் பொதுப் பணித் துறையினுடைய தலைமைப் பொறியாளரிடத்தில் அணுகியபொழுது, தலைமைப் பொறியாளர், குழாயின்மூலமாகத் தண்ணீர் எடுத்துச் செல்லாமல் கால்வாய்மூலமாகத் தண்ணீர் எடுத்துச் சென்றால் அனுமதிக்கின்றோம் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப் பொதுப் பணித் துறை கூறுவதற்குக் காரணம், ஆண்டு முழுவதும் அங்கே தண்ணீர் கிடைக்காத காரணத்தினால், அந்த அணையிலே ஆழ்துளைக் குழாய் போட்டு தண்ணீர் எடுத்தால் பயிர்ப் பாசனங்களுக்குத் தண்ணீர் இல்லாமல் போய்விடும் என்பதற்காக அவர்கள் அனுமதி மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு எல்லோருக்கும் நிறைவான, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கின்ற காரணத்தால், மீண்டும் அதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒரு சாலை மிகவும் பழுதடைந்துள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அந்தச் சாலையை உடனடியாக, நேரடியாக ஆய்வு செய்து, அதில் தவறு செய்திருக்கின்றபட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.